Tsi10T

தென்காசி மாவட்டம்

காலாண்டுப் பொதுத் தேர்வு - 2023

19-09-2023

-----

வகுப்பு 10

காலஅளவு: 3.00 மணிநேரம் | தமிழ் | மதிப்பெண்கள்: 100

குறிப்பு: i) இவ்வினாத்தாள் ஐந்து பகுதிகளைக் கொண்டது

ii) விடைகள் தெளிவாகவும் குறித்த அளவினதாகவும் சொந்த நடையிலும் அமைதல் வேண்டும்

பகுதி - I (மதிப்பெண்கள்: 15)

I. உரிய விடையைத் தேர்ந்தெடுத்துக் குறியீட்டுடன் எழுதுக. 15×1=15

1) மெத்த வணிகலன் - என்னும் தொடரில் தமிழழகனார் குறிப்பிடுவது

அ) வணிகக் கப்பல்களும் ஐம்பெருங்காப்பிங்களும்

ஆ) பெரும் வணிகமும் பெருங்கலன்களும்

இ) ஐம்பெருங் காப்பியங்களும் அணிகலன்களும்

ஈ) வணிகக் கப்பல்களும் அணிகலன்களும்.

2) எந்தமிழ்நா என்பதைப் பிரித்தால் எவ்வாறு வரும் -

அ) எந் + தமிழ் + நா ஆ) எந்த + தமிழ் + நா

இ) எம் + தமிழ் + நா ஈ) எந்தம் + தமிழ் + நா

3) அறிஞருக்கு நூல், அறிஞரது நூல் ஆகிய சொற்றொடர்களில் பொருளை வேறுபடுத்தக் காரணமாக அமைவது

அ) எழுவாய் ஆ) வேற்றுமை உருபு

இ) உவம உருபு ஈ) உரிச்சொல்

4) 'மருந்தே ஆயினும் விருந்தொடு உண்' என்று குறிப்பிடும் நூல் -

அ) கொன்றை வேந்தன் ஆ) குறுந்தொகை

இ) திருக்குறள் ஈ) நற்றினை

5) பரிபாடல் அடியில் 'விசும்பும் இசையும்' என்னும் தொடர் எதனைக்குறிக்கிறது?

அ) வானத்தையும் பாட்டையும் ஆ) வானத்தையும் புகழையும்

இ) வானத்தையும் பூமியையும் ஈ) வானத்தையும் பேரொலியையும்

6) பாரத ஸ்டேட் வங்கியின் உரையாடு மென்பொருள் எது?

அ) துலா ஆ) சீலா இ) குலா ஈ) இலா

7) 'அருளைப் பெருக்கி அறிவைத் திருத்தி
மருளை அகற்றி மதிக்கும் தெருளை' - என்று இவ்வடிகளில் குறிப்பிடப்படுவது எது?

அ) தமிழ் ஆ) அறிவியல் இ) கல்வி ஈ) இலக்கியம்

8) மலர்கள் தரையில் நழுவும் எப்போது?

அ) அள்ளி முகர்ந்தால் ஆ) தளரப் பிணைத்தால்

இ) இறுக்கி முடிச்சிட்டால் ஈ) காம்பு முறிந்தால்

9) குலசேகர ஆழ்வார் 'வித்துவக்கோட்டம்மா' என்று ஆண் தெய்வத்தை அழைத்துப் பாடுகிறார். பூனையார் பால்சோற்றைக் கண்டதும் வருகிறார் ஆகிய தொடர்களில் இடம்பெற்றுள்ள வழுவமைதி முறையே.

அ) மரபு வழுவமைதி, திணை வழுவமைதி

ஆ) இடவழுவமைதி - மரபு வழுவமைதி

இ) பால் வழுவமைதி, திணை வழுவமைதி

ஈ) கால வழுவமைதி - இடவழுவமைதி

10) வினாவிற்கு விடையாக இனிமேல் நேர்வதைக் கூறுவது

அ) உற்றது உரைத்தல் விடை ஆ) உறுவது கூறல் விடை

இ) இனமொழி விடை ஈ) வினா எதிர் வினாதல் விடை

11) கோசல நாட்டில் கொடை இல்லாத காரணம் என்ன?

அ) நல்ல உள்ளம் உடையவர்கள் இல்லாததால்

ஆ) ஊரில் விளைச்சல் இல்லாததால்

இ) அரசன் கொடுங்கோல் ஆட்சி புரிவதால்

ஈ) அங்கு வறுமை இல்லாததால்

www.freetnbooks.com

**பாடலைப் படித்துப் பின்வரும் வினாக்களுக்கு (12, 13, 14, 15) விடை தருக.**

'முத்தமிழ் துய்ப்பதால் முச்சங்கம் கண்டதால்
மெத்த வணிகலமும் மேவலால் - நித்தம்
அணைக்கிடந்தே சங்கத் தவர்காக்க ஆழிக்கு
இணைகிடந்த தேதமிழ் ஈண்டு'

12) இப்பாடல் இடம்பெற்ற நூல் -
அ) நற்றிணை ஆ) முல்லைப்பாட்டு
இ) தனிப்பாடல் திரட்டு ஈ) சிலப்பதிகாரம்

13) பாடலில் இடம்பெற்றுள்ள பொருத்தமான அணி -
அ) இரட்டுற மொழிதல் அணி ஆ) தீவக அணி
இ) வஞ்சப்புகழ்ச்சி அணி ஈ) நிரல் நிறை அணி

14) தமிழுக்கு இணையாய்ப் பாடலில் பொருத்தப்படுவது -
அ) சங்கப்பலகை ஆ) கடல் இ) அணிகலன் ஈ) புலவர்கள்

15) தொழிற்பெயர் அல்லாத சொல் -
அ) துய்ப்பதால் ஆ) அணிகலன் இ) மேவலால் ஈ) கண்டதால்

## பகுதி - II (மதிப்பெண்கள்: 18)

### பிரிவு - 1

**எவையேனும் நான்கு வினாக்களுக்கு மட்டும் குறுகிய விடையளிக்க.** **4×2=8**
**21 ஆவது வினாவிற்குக் கட்டாயமாக விடையளிக்க வேண்டும்.**

16) விடைக்கேற்ற வினாக்கள் அமைக்க
அ) அமெரிக்காவின் மினசோட்டா தமிழ்ச் சங்கம் 'வாழை இலை விருந்து விழாவை' ஆண்டுதோறும் கொண்டாடி வருகிறது.
ஆ) தப்பாட்டம் நிகழ்த்தப்படும் சூழலுக்கேற்ப பல்வேறு ஆட்டக்கூறுகளைக் கொண்டுள்ளது.

17) தற்கால உரைநடையில் சிலேடை அமையும் நயத்திற்கு எடுத்துக்காட்டு தருக.

18) வருங்காலத்தில் தேவையெனக் கருதுகின்ற செயற்கை நுண்ணறிவு பொதிந்த இரண்டு அறிவியல் கண்டுபிடிப்புகளைக் குறிப்பிடுக.

19) மருத்துவத்தில் மருந்துடன் அன்பும் நம்பிக்கையும் ஆற்றும் பாங்கினை எழுதுக.

20) சாந்தமானதொரு பிரபஞ்சத்தைச்
சுமக்கின்ற ஒல்லித் தண்டுகள் - இக்கவிதை அடிகள் உணர்த்தும் உள்ளழகை விளக்குக.

21) குற்றம் இல்லாமல் தன் குடிப்பெருமையை உயரச் செய்யும் கருத்தினைக் கொண்ட திருக்குறளை எழுதுக.

### பிரிவு - 2

**எவையேனும் ஐந்து வினாக்களுக்கு மட்டும் குறுகிய விடையளிக்க.** **5×2=10**

22) 'வேங்கை' என்பதைத் தொடர்மொழியாகவும் பொதுமொழியாகவும் வேறுபடுத்திக் காட்டுக.

23) **தொடரில் விடுபட்ட இடங்களை வண்ணங்களால் நிரப்புக.**
அ) வானம் ........... தொடங்கியது. மழை வரும் போலிருக்கிறது.
ஆ) அனைவரின் பாராட்டுகளால், வெட்கத்தில் பாடகரின் முகம் ...........

24) **இரு சொற்களையும் ஒரே தொடரில் அமைத்து எழுதுக.**
அ) தொடு - தோடு ஆ) மலை - மாலை

25) **கலைச்சொற்கள் தருக.** அ) Homograph ஆ) Biotechnology

26) வருகின்ற கோடை விடுமுறையில் காற்றாலை மின் உற்பத்தியை நேரில் காண்பதற்கு ஆரல்வாய்மொழிக்குச் செல்கின்றேன் - இத்தொடர் கால வழுவமைதிக்கு எடுத்துக்காட்டாக அமைவது எவ்வாறு?

www.freetnbooks.com

27) எண்ணுப்பெயர்களைக் கண்டு தமிழ் எண்களில் எழுதுக.

அ) எறும்புந்தன் கையால் எண் சாண்

ஆ) பத்தாம் வகுப்புப் பொதுத்தேர்வில் நீவிர் பெற விரும்பும் மதிப்பெண்

28) 'அமர்ந்தான்' - பகுபத உறுப்பிலக்கணம் தருக.

## பகுதி - III (மதிப்பெண்கள்: 18)

### பிரிவு - 1

**எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் சுருக்கமான விடையளிக்க.** 2×3=6

29) சோலைக் (பூங்கா) காற்றும் மின் விசிறிக் காற்றும் பேசிக்கொள்வது போல் ஓர் உரையாடல் அமைக்க.

30) 'பலர்புகு வாயில் அடைப்பக் கடவுநர்
வருவீர் உளீரோ' - குறிப்பு வரைக.

31) **உரைப் பத்தியைப் படித்து வினாக்களுக்கு விடை தருக.**

சிற்றூர் மக்களின் வாழ்வியல் நிகழ்வுகளில் பிரித்துப் பார்க்க இயலாக் கூறுகளாகத் திகழ்பவை நிகழ்கலைகள். இவை மக்களுக்கு மகிழ்ச்சியெனும் கனி கொடுத்துக் கவலையைப் போக்குகின்றன. சமுதாய நிகழ்வுகளின் ஆவணங்களாகவும் செய்திகளைத் தரும் ஊடகங்களாகவும் திகழ்கின்றன. மக்களின் கலை, அழகியல், புதுமை ஆகியவற்றின் எச்சங்களை அறிவதற்குத் தற்காலத்தில் நிகழ்த்தப்படும் கலைகள் துணைசெய்கின்றன.

அ) நிகழ்கலைகள் எப்பகுதி மக்களின் வாழ்வியல் கூறுகளில் ஒன்றாகத் திகழ்கின்றன.

ஆ) நிகழ்கலைகளின் பயன்கள் இரண்டினைக் கூறுக.

இ) பழந்தமிழ் மக்களின் எந்தெந்த எச்சங்களை அறிவதற்கு நிகழ்கலைகள் துணை செய்கின்றன?

### பிரிவு - 2

**எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் சுருக்கமான விடையளிக்க.** 2×3=6

**34வது வினாவிற்குக் கட்டாயமாக விடையளிக்க வேண்டும்.**

32) கூத்தனைக் கூத்தன் ஆற்றுப்படுத்துதலைக் கூத்தராற்றுப்படை எவ்வாறு காட்டுகிறது?

33) மன்னன் இடைக்காடனார் என்ற புலவனுக்குச் சிறப்புச் செய்தது ஏன்? விளக்கம் தருக.

34) அடிபிறழாமல் எழுதுக.

'விருந்தினனாக' எனத் தொடங்கும் காசிக்காண்டம் பாடல்

**(அல்லது)**

'வெய்யோனொளி' எனத் தொடங்கும் கம்பராமாயணப் பாடல்.

### பிரிவு - 3

**எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் சுருக்கமான விடையளிக்க.** 2×3=6

35) முயற்சி திருவினை ஆக்கும் முயற்றின்மை
இன்மை புகுத்தி விடும்.

இக்குறட்பாவில் அமைந்துள்ள பொருள்கோளின் வகையைச் சுட்டி விளக்குக.

36) 'வேலொடு நின்றான் இடு என்றது போலும்
கோலொடு நின்றான் இரவு' - இக்குறளில் பயின்றுவரும் அணியை விளக்குக.

37) அலகிட்டு வாய்பாடு தருக.
பல்லார் பகைகொளலின் பத்தடுத்த தீமைத்தே
நல்லார் தொடர்கை விடல்.

## பகுதி - IV (மதிப்பெண்கள்: 25)

**அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்க.** 5×5=25

38) அ) மனோன்மணீயம் சுந்தரனாரின் தமிழ்த்தாய் வாழ்த்தையும் பெருஞ்சித்திரனாரின் தமிழ் வாழ்த்தையும் ஒப்பிட்டு ஒரு மேடைப்பேச்சு ஒன்றை உருவாக்குக.

**(அல்லது)**

ஆ) சந்தக் கவிதையில் சிறக்கும் கம்பன் என்ற தலைப்பில் இலக்கிய உரை எழுதுக.

39) அ) மாநில அளவில் நடைபெற்ற 'மரம் இயற்கையின் வரம்' எனும் தலைப்பிலான கட்டுரைப் போட்டியில் வெற்றி பெற்று முதல் பரிசு பெற்ற நண்பனை வாழ்த்தி மடல் எழுதுக.

**(அல்லது)**

ஆ) உங்கள் தெருவில் மின்விளக்குகள் பழுதடைந்துள்ளன. இரவில் சாலையில் நடந்து செல்வோருக்கும் வாகன ஓட்டிகளுக்கும் ஏற்படும் இடையூறுகளைக் குறிப்பிட்டு, மின்வாரிய அலுவலருக்குக் கடிதம் எழுதுக.

www.freetnbooks.com

40. **காட்சியைக் கண்டு கவினுற எழுதுக.**



41) வீட்டு எண்.36, தென்றல் நகர், தென்காசி மாவட்டத்தில் வசித்து வரும் இளமாறன் மகள் வெண்பாவிற்காக, கொடுக்கப்பட்டுள்ள நூலக உறுப்பினர் சேர்க்கை விண்ணப்பப்படிவத்தை நிரப்புக.

42) அ) வானொலி அறிவிப்பைக் கேட்ட நீங்கள் உங்களையும் உங்கள் குடும்பத்தாரையும் காப்பாற்றும் வகையில் செய்யும் செயல்களை வரிசைப்படுத்தி எழுதுக.

1. புயலின்போது வெளியே செல்ல மாட்டேன்
2.
3.
4.
5.

சிவக்குமார். மு.
பதிராம் மேட்டுத்தெரு
வல்லம் - 627809
தென்காசி மாவட்டம்.

**(அல்லது)**

**மொழிபெயர்க்க:**

Respected ladies and gentlemen, I am Ilangovan studying tenth standard. I have come here to say a few words about our Tamil culture. Sangam literature shows that Tamils were best in culture and civilization about two thousand years ago. Tamils who have defined grammar for language have also defined grammar for life. Tamil culture is rooted in the life styles of Tamils throughout India, Srilanka, Malaysia, Singapore, England and Worldwide. Though our culture is very old, it has been updated consistently. We should feel proud about our culture. Thank you one and all.

## பகுதி - V (மதிப்பெண்கள்: 24)

**அனைத்து வினாக்களுக்கும் விரிவான விடையளிக்க.** **3×8=24**

43) அ) தமிழின் சொல்வளம் பற்றியும் புதிய சொல்லாக்கத்திற்கான தேவை குறித்தும் தமிழ் மன்றத்தில் பேசுவதற்கான உரைக் குறிப்புகளை எழுதுக.

**(அல்லது)**

ஆ) நெகிழிப் பைகளின் தீமையைக் கூறும் பொம்மலாட்டம் உங்கள் பள்ளியின் ஆண்டு விழாவில் நிகழ்த்தப்படுகிறது. அதற்குப் பாராட்டுரை ஒன்றினை எழுதுக.

44) அ) புயலிலே ஒரு தோணி கதையில் இடம்பெற்றுள்ள வருணனைகளும் அடுக்குத் தொடர்களும் ஒலிக்குறிப்புச் சொற்களும் புயலில் தோணி படும்பாட்டை எவ்வாறு விவரிக்கின்றன?

**(அல்லது)**

ஆ) 'கற்கை நன்றே கற்கை நன்றே
பிச்சை புகினும் கற்கை நன்றே' என்கிறது வெற்றிவேற்கை. மேரியிடமிருந்து பறிக்கப்பட்ட புத்தகம். அச்சிறுமியின் வாழ்க்கையில் கல்விச்சுடரை ஏற்றிய கதையைப் பற்றிய உங்களின் கருத்துகளை விவரிக்க.

45) **அ) குறிப்புகளைக் கொண்டு கட்டுரை ஒன்று தருக.**
முன்னுரை - விசும்பின் துளி - விண்ணின் மழைத்துளி - வான் சிறப்பு - வள்ளுவன் வாய்மொழி - மரம் வளர்ப்போம் - பசும்புல் நுனி - இயற்கையைப் போற்றுவோம் - முடிவுரை.

**(அல்லது)**

ஆ) 'விண்வெளியும் கல்பனா சாவ்லாவும்' எனும் தலைப்பில் கட்டுரை எழுதுக.

www.freetnbooks.com

நூலக உறுப்பினர் படிவம்

## ________ மாவட்ட நூலக ஆணைக்குழு

மைய / கிளை / ஊர்ப்புற நூலகம் ________________________

**உறுப்பினர் சேர்க்கை அட்டை**

அட்டை எண்

உறுப்பினர் எண்

1. பெயர் ________________
2. தந்தை பெயர் ________________
3. பிறந்த தேதி ________________
4. வயது ________________
5. படிப்பு ________________
6. தொலைபேசி எண் ________________
7. முகவரி ________________
(அஞ்சல் குறியீட்டு எண்ணுடன்) ________________

நான் ________________ நூலகத்தில் உறுப்பினராகப் பதிவு செய்ய இத்துடன் காப்புத்தொகை ரூ________, சந்தா தொகை ரூ________ ஆக மொத்தம் ரூ. ________ ரொக்கமாகச் செலுத்துகிறேன். நூலக நடைமுறை மற்றும் விதிகளுக்குக் கட்டுப்படுகிறேன் என உறுதியளிக்கிறேன்.

இடம் :

நாள் :

தங்கள் உண்மையுள்ள

திரு / திருமதி / செல்வி / செல்வன்________ அவர்களை எனக்கு நன்கு தெரியும் என சான்று அளிக்கிறேன்.

பிணைப்பாளர் கையொப்பம்
(பதவி மற்றும் அலுவலகம்)

அலுவலக முத்திரை

(மாநில / மைய அரசு அதிகாரிகள், கல்லூரி முதல்வர்கள், பேராசிரியர்கள், உயர் / மேல்நிலைப்பள்ளி தலைமை ஆசிரியர்கள், சட்டமன்ற / நாடாளுமன்ற உறுப்பினர்கள், நகராட்சி / மாநகராட்சி / ஒன்றிய / பேரூராட்சி உறுப்பினர்கள்)

www.freetnbooks.com